நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாறு**

நாள் - 05.10.2023 CC.14 /2022 அ.சா.1 மோகன்தாஸ் , த-பெ.ராசு

கு.ப.ம.எண். **2448 /2023,** நாள் - **.20.07.2023** மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அ.சா.**1** இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை -

1) நான் பி.ஏ., படித்துள்ளேன். நான் எழுத்துமூலமான புகார் எதுவும் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் காவலர்களே எழுதிகொண்டார்களா என்றால், நான் சொல்ல, சொல்ல போலிசார் எழுதினார்கள். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கம் காவல்நிலையத்திற்கும் உவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 11 கி.மீ. தூரம் இருக்கும். நீங்கள் காவல்நிலையத்தை தாண்டித்தான் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் வேறு வழியாகவும் செல்லலாம். குமார் என்பவர் டாடா ஏசி நிறுத்தியிருந்த இடத்தின் சர்வே எண் 90/3A என்றால் எனக்கு சர்வே எண் தெரியாது. டாடா ஏசி நிறுத்தியிருந்த இடம் என் தாயார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான்.

2) மேற்படி இடத்தில் சகோதரி ராஜேஸ்வரி, எனது சகோதரர் மனைவி உமா என்பவர்களுக்கும் உரிமை உண்டு. மேற்படி இடத்தை ராஜேஸ்வரியிம், உமாவும் குமார் என்பவரிடம் விற்றுவிட்டார்கள். அந்த இடத்தில்தான் குமார் டாடா ஏசி வாகனத்தை நிறுத்தியிருந்தார் என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் சுமார் 130 மீட்டர் தூரம் இருக்கும். மணி மகன் பார்த்திபன் என்பவரை எனக்கு தெரியும். 04.10.2021 அன்று நான், தங்கம் மற்றும் கஜேந்திரன் ஆகியோர் பார்த்திபனை தாக்கி காயம் ஏற்படுத்தியதாக நடுக்காவேரி காவல்நிலையத்தில் குற்ற எண்.612/2021 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) கஜேந்திரன் நீதிமன்ற ஊழியர் ஆவார். கஜேந்திரன் சொன்ன அறிவுரையின்பேரில் நான் மருத்துவமனை சென்றேன் என்றால் சரியல்ல. பார்த்திபனுக்கும், எதிரி குமாருக்கும் எதுவும் உறவுமுறை உண்டா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. குமார் என்பவர் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில்தான் டாடா ஏசி வாகனத்தை நிறுத்தியிருந்தார் என்றால் சரியல்ல. பார்த்திபன் எனது உறவினர்

என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோன்று எதிரிகள் என்னை திட்டவும் இல்லை, அடிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

மறு விசாரணை : இல்லை. .

**(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு)